ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 12—3—44 | இதழ் 2.

## லட்சுமிகாந்தன்

"அசோக வனத்திலே அன்னை சீதா பிராட்டி இருப்பதைத் தத்ரூபமாகக் காட்டுகிறார்கள் சார்! நமது கண்களிலே நீர்தாரைகவழிகிறது. இவ்விதமான சோகரசம், புராணங்களிலேஇருப்பதால தான், நாடகக்காரர்கள்,புராணங்களையே நடத்துகிறார்கள்" என்றுசிலர் கூறக்கேட்டிருக்கிறேன். நவரசங்களையும் சித்தரிக்க வேண்டுமானால், புராணங்கள் தவிர புதுக் கதைகளால்முடியாது, என்று இல்லாமை அந்தாதிபாடும் கலாவாணர்கள் ஒருமுறை இலட்சுமிகாந்தனைப் பார்க்கவேண்டும், நாடகத்தை, ஆளையல்ல!!

நாடகாசிரியர் தோழர் T. P. பொன்னுச்சாமி அவர்களால் பயிற்றுவிக்கப் பட்ட மங்களபாலகானசபையார்,நான்கு வாரங்களாகச்சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் "லட்சுமிகாந்தன்" என்ற நாடகத்தை நடத்திவருகிறார்கள்.

"பால்யவிவாகத்திற்குப் பலியாகி விதவையாகி, வாலிபத்தின் உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கருவுற்று, உலகம் பழிக்கு மெனப்பயந்து, பெற்றெடுத்தகுழந்தையையேகொன்றுவிட்டுக்கதறும் அம்சாவின் துயரத்தை, நடித்துக் காட்டும்போது, புராணப்பத்தினிகளின் புலம்பலை மறந்துவிடத்தான்வேண்டிவரும், அவ்வளவு உருக்கம், நிலைமை அவ்வளவு நெஞ்சைப் பஞ்சாக்கக்கூடியதாக இருக்கிறது. இளமங்கை, எழிலுமுள்ளவள், செய்வது மகாபாதகம் என்பதைத் தெரிந்து மிருக்கிறாள், ஆனால் அந்தச் செயல் புரியவைக்கிறது சமூகக்கட்டுப்பாடு எனும் சனியன்! இந்தச் சுழலிலே சிக்கி அம்சா கதறுகிறாள், ஏ! பாழும் சமூகமே! பால்யவிவாகமெனும் பயங்கரப் பேயால், வாட்டும் சமூகமே! என்று பலப்பலக்கூறி" நடிகனின் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்று கருதுகிறேன், பெயர் எதுவாக இருப்பினும் கீர்த்தி வாய்ந்த நடிகர்கூட்டத்திலே சேர்க்கப் படவேண்டிய பெயர்என்பதிலே சந்தேகமில்லை. நல்ல முகவெட்டு, பலபெண்கள் கண்டு பொறாமைப்படக்கூடிய விதத்திலே அந்தநடிகனுக்குஅமைந்திருக்கிறது.

இந்தச் சோகத்திலே எங்களைத்தள்ளவா, நாடகம் நடத்துகிறீர்கள் என்று யாராவது கேட்பார்களென்றோ, என்னவோ, நகைச்சுவையைப் பிறகு, வெள்ளமாகக்கொட்டுகிறார்கள், தோழர்கள். ஊரெங்கும் பலவிதமான பஞ்சத்திலே சிக்கிவதைகிற நேரத்திலே, எல்லாத் துக்கத்தையும் மறந்துசிரித்தபடியாக நம்மை உட்காரவைத்துவிடுகிறார்கள் நண்பர்கள் மாதவன் சம்பங்கி, சந்தானம், ஆகிய நடிகத்தோழர்கள். நண்பர் மாதவனின் இயற்கை நடிப்பும் பேச்சும், எவரையும் வசீகரிக்கும் விதத்திலே அமைந்திருக்கிறது. இடையிடையே, இன்றைய சினிமாவின் நிலைமையையும், எப்படியாவது வாழவேண்டும் என்ற இலட்சிய வாதிகளின் வண்டவாளத்தையும் வெளுத்து வாங்குகிறார்கள்.சிங்கக்குட்டிகோவிந்தன் என்ற பாத்திரத்திலே, மாதவன் அபாரமாக நடிக்கிறார். இடையே ஒரு முஸ்லீமாகவருகிறார், 'ஷாதி'செய்துகொள்ளச் சொல்லிக் கொஞ்சுகிறார், மூன்றுகுரலும் முக்கோணமுகமும், நெளியும் நடையும் கொண்ட நாரிமணியிடம்! அந்நாரிமணியாக நடிக்கும் தோழர், வெட்கப்படுவதும் கோபப்படுவதும், கொஞ்சுவதும் திட்டுவதும், ஒயிலாக நடித்துக்காட்டுவதும் உடம்பைவளைப்பதும், அடா, அடா! அருமை! அருமை!! பாங்கிப் ப்யூனாக நடிக்கும், மற்றொரு நடிகர் நகைச்சுவையை வாரிவாரி வீசுகிறார். டானிங்சீனோ தர்பார்மண்டபமோ, இல்லை! சமிக்கி ஜிகினா வேலைகள் இல்லை! பல்புகளின் பராக்கு இல்லை! நடிப்புத்திறன் நன்றாக இருக்கும்போது இந்த பக்கபலம் எதற்கு? சாதாரண உடை, சாதாரண சீன்கள், அபாரமான நடிப்பு. சென்னை குதூகலிப்பதன் காரணம் இதுதான். சினிமாத்துறையும் விஞ்ஞானமும் வளராத காலத்திலேயே, கன்னையா கம்பெனியார், சீன்ஜோடனைகளைக் காட்டிவிட்டார்கள் சென்னையிலே. எனவே, இன்று ஜோடனையைக்கண்டு சென்னை ரசிகர்கள் மதிப்பதில்லை—எவ்வளவு செலவு பிடித்திருக்கும் என்ற கணக்கெடுத்துப் பார்த்துவிட்டு, கம்பெனியின் வருமானத்தால், வட்டிகட்டி வருகிறதா இல்லையா என்றுகூறுவர். ஆனால் சம்பங்கியும் அவருடைய தோழர்களும் நடத்தும் நாடகத்திலே நடிப்பைக் காண்கிறார்கள், எனவே, மதிக்கிறார்கள், மகிழ்கிறார்கள். வாழ்க்கையின் ஒருபகுதி படம்பிடித்துக் காட்டப்படுகிறது என்று உவகையுடன் கூறி ரசிக்கிறார்கள். ஒருமுறை நாடகத்தைப் பார்த்தவர்கள், மறுபடியும் வருகிறார்கள், நண்பர்களை அழைத்துக் கொண்டு!

"லட்சுமிகாந்தனைப் பார்த்தீர்களா?"

"இல்லையே"

"ஏனய்யா, சென்னையிலே இல்லையா சிலநாட்களாக!ஊரெங்கும்அதேபேச்சாக இருக்கிறது. நீர் பார்க்கவில்லையா? நல்ல மனுஷனய்யா நீர். அந்த மன்கீ டான்ஸ ஒண்ணைப் பார்த்தாலே போதும், உம்ம வயிறு வெடித்துவிடும்! சிரிச்சிச் சிரிச்சி. இன்று இரவு போவோம் வாரும்"

இது ஊரார் உரையாடலாக இருக்கிறது.

ரங்கோன் கமலம், என்று தோழர் சம்பங்கியும், சீமைக் கமலம் எனறு தோழர்' மாதவனும் பெண் வேடமணிந்துவரும், சீன் இருக்கிறதே. அது நகைச்சுவையின் சிகரமாக இருக்கிறது. இன்ஸ்பெக்டராக நடிக்கும் நேர்த்தியான நடிகர் தோழர் சந்தானமே மாதவனின் (மதுரமான!) "சுஜனஜீவனுவுக்கும்" அனுமந்தநாட்டியத்துக்கும், கட்டுப்படுகிறார் என்றால், நாமெல்லாம் தப்பவாமுடியும்! ஒரே சிரிப்பு, கொட்டகை பூராவும்! இன்றே போய்ப்பாருங்கள் "இலட்சுமிகாந்தனை" நான் கூறியதுஅவ்வளவும் உண்மையே என்பதைச் சொல்வீர்கள், சிரித்துக் கொண்டே.

## விருத்தாச்சலம்.

விருத்தாச்சலம் "திராவிடநாடு" சந்தாதார்கள் இம்மாதமுடிவிற்குள் பாக்கி தொகை பூராவும்கட்டி ரசீதுபெற்றுக் கொள்ளவும். செலுத்தாத நபர்களுக்கு பேப்பர் நிறுத்தப்படும், C. முனுசாமி.

# குடந்தை, மாவட்ட திராவிட மாணவர் மாநாட்டுத் திறப்புரை.

(கரந்தைப் புலவர் கோ. சி. பெரியசாமி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு)
(சென்ற வாரத்தொடர்ச்சி)

திராவிடநாடு திராவிடர்க்கே.

முகம்மதியர்கள் "முகம்மதலி ஜின்ணுத்" தலைமையில் ஒன்றித்து நின்று "பாகிஸ்தான் வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தல்போலத் திராவிடர்களாகிய யாமும் திராவிட நாட்டுப் பிரிவினை குறித்துப் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தலைமையில் பெருங்கிளர்ச்சி புரிய வேண்டும். (பெரிய ஆரவாரமும், கைத்தட்டொலியும்) நம் மாணவருட் பலர் சைவமதக் கொள்கையைப் பின்பற்றுவோராக இருக்கலாம். சிலர் கிறித்து மதத்தைப் பின்பற்றுவோராக இருக்கலாம், மற்றும்பலர் ஜைனம் பௌத்தம் முதலியமதங்களைப் பின்பற்றுவோராக இருக்கலாம், சிலர் முஸ்லிம் மதக்கொள்கையை யுடையவராகஇருக்கலாம், இவையாவம் பிரிவுற்ற, தனிப்பட்ட கொள்கைகளாதலின் இக்கொள்கைகளைத் தனித்த முறையில் அவரவர் விருப்பின் வண்ணம் பின்பற்றி யொழுகலாம். இக்கொள்கைகளால் யாம் நாட்டுப் பிரிவினைக்குத் தடைவிளைவித்துக் கொள்ளக்கூடாது. தனித்தவாழ்க்கை வேறு; பொது வாழ்க்கை வேறு. தனித்தவாழ்க்கையில் சில கொள்கைகளைப் பின்பற்றி யொழுகுவோர் பொதுவாழ்க்கையில் அக்கொள்கைகளைப் புகுத்துதற்கு முயற்சித்தல் கூடாது. புகுத்த முயற்சித்தலினாற்றான் யாம் ஒருவருக்கொருவர் பிளவுபடுகின்றோம், தனிப்பட்ட தம்கொள்கைகளை அரசியலிற் பெரும்பாலான மக்களிடையே புகுத்தமுயன்று தோல்வியுற்றோர் பலர். திராவிடநாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் திராவிடநாட்டைத்தனியே பிரிக்க வேண்டுமென்று கிளர்ச்சிசெய்தால், அக்கிளர்ச்சிக்குத் துணைபுரிந்து அவர்களை ஊக்குதலே சான்றாண்மையாகும். இக்கிளர்ச்சிஇயக்கத்திற்குத்தலைமை தாங்கத்தக்கார் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களேயாவர். என்னெனின்? எத்துணையோ ஆண்டுகளாக இத்திராவிட நாட்டின் பொது நிலையமாகிய புகைவண்டிநிலைய உணவு விடுதிகளில் "இவ்விடம் பிராமணாளுக்கு, இவ்விடம் சூத்ராளுக்கு" எனவரைந்து தொங்கவிடப்பட்டிருந்த வருணாச்சிரம அறிவிப்புப் பலகைகள், ஒரேநாளில் ஒரேவரியில் அரசாங்கத்தாரால் அகற்றப்பெறவும், மக்களுள் யாவரும் சமம் என்றகொள்கையைச் சோற்றுக்கடைப் பார்ப்பனரும் உணர்ந்து உணர்ச்சி பெறவும், இந்நாட்டிற் செயல்புரிந்தோர் யார்? அவர் எம் இராமசாமிப் பெரியாரன்றோ? (பெரும் கைதட்டொலியும் ஆரவாரமும்) திராவிடர் என்ற தனிஇனமக்கள்பெரும்பகுதியினர் ஆரியரால் அடக்கி ஆளப்பட்டு நலிவுற்றோர் இத்திராவிடநாட்டில் உளரென்று பிரித்தானியப் பாராளும் மன்றமும் உணரும் வண்ணம் செயல் புரிந்தோர் யார்? அவர்நம் பெரியாரன்றோ? எதிரிகள் நம் கட்சியை எழுஅடிஆழத்திற் கீழேதள்ளிப் புதைத்துவிட்டோமென் இகழ்ந்துரைத்த காலையில் பிரித்தானியப் பாராளும் மன்றத்தின் ஆணைபெற்று இவ்விந்திய நாட்டுக்குரிய திட்டத்தைத் தாங்கி இந்நாட்டிற்குவந்த "சர். கிரிப்ஸ்' அவர்களுடன் கலந்து பேச நம்கட்சித் தலைவர்களையும் அழைக்கும் வண்ணம் நம்கட்சிக்குப் பெருமையைத் தேடிக்கொடுத்தவர் யார்? அவர் நம் பெரியாரன்றோ? (ஆம்! ஆம் எனும் ஆரவார வொலி) சென்ற சட்டசபையில் பதினெட்டுத் திங்கள் நாட்டையாண்ட பார்ப்பன அமைச்சர்கள் நாட்டையாள வகையறியாதாரென அரசாங்கமும் உணரும்படிச் செய்தவர் யார்? அவர் நம் பெரியாரன்றோ? தமிழ்மொழியின் பெருமையை யொழித்து ஆரியமொழியின் மேன்மையை நாட்டில்நாட்ட அரசாங்க உதவியைக்கொண்டு கட்டாய இந்தியை சட்டத்தின் மூலம்நுழைத்து இன்னல் விளைத்துத் தமிழரைப் புண்படுத்தியஆரிய அமைச்சர் செயல்களனைத்தும் அறிவற்ற செயல்களென அரசாங்கமே யுணர்ந்து விதித்த சட்டங்களைத் திரும்பப்பெற வீறுடைச்செயலாற்றியவர் யாவர்! அவர் நம் பெரியாரன்றோ? அவர்தம் ஆணை வழிநின்ற தோழர்களுமன்றோ! இத்தகு சிறந்ததலைவரையன்றித் திராவிட நாட்டைத்தனியே வடநாட்டு முதலாளிகளின் ஆட்சியினின்றும் பிரித்தற்கு வேறு தலைவருளரோ? பெரியார் கொள்கைகளில் சில ஒரு சிலருக்கு ஏற்புடைத்தாகத் தோன்றாவிடினும் அக்கொள்கைகளினால் மனத்திரிபின்றித் திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு ஏற்பனசெய்ய வேண்டுமென மாணவர்களாகிய நீங்கள் நாட்டு மக்கட்கு அறிவித்துநற்பணியாற்ற வேண்டுகிறேன். நம்திராவிட வாலிபர்களிற் பலர் காங்கிரசில்சேர்ந்து அடிமையை அகற்றுவோமென எண்ணி வீணாகக்கெட்டழிகின்றனர். இந்நாடுநூற்றைம்பது ஆண்டுகளாகத்தான் வெள்ளையர்களால் ஆளப்பட்டுவருகிறது. வெள்ளையர்கட்கு யாம்நூற்றைம்பது ஆண்டுகள் தாம்அடிமைப்பட்டுள்ளோம். ஆனால் ஆரியம் நம்மை இரண்டாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டுவருகின்றது. நூற்றைம்பதுஆண்டுகளாக ஆண்டுவரும் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியினும் இரண்டாயிரம் ஆண்டுகளாக நம்மை அடக்கியொடுக்கி ஆட்சிபுரிந்துவரும் பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தை ஒழித்தற்கேற்ற செயலை யாம்முதலிற் செய்யவேண்டாமா? பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலும் ஆரிய ஏகாதிபத்தியம் மிகமிகக் கொடியதல்லவா? இவ்வாரியக் கொடியஆட்சியை முதலில் ஒழித்துப் பின்னர் பிரித்தானை நோக்கி நம்உரிமையைக் கேட்போமாக. "தோழர் காந்தியவர்கள்" "வெள்ளையர்களாகிய நீங்கள் இந்நாட்டிற்கு வியாபாரம் காரணமாகவந்தீர்கள்; இந்நாட்டையாளவல்ல; நீங்கள் மூட்டைமுடிச்சுகளுடன் கப்பலேறுங்கள்" என வெள்ளையர்களைநோக்கிக் கூறுகின்றார். வெள்ளையராயினும் தமக்கு வேண்டியன கொண்டு நமக்கும் சிலஉரிமைகளை வழங்கிப் பிரித்தாளுகின்றனர். அவர்களாட்சியுரிமையைப் பாதுகாக்க வெடிகுண்டு வீசும் விமானங்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும், டார்ப்பீடோக்களும் இவற்றையாட்சிபுரியும் அறிஞர்களும், வீரர்களும் உள்ளனர். இவ்வாறாகப் பாதுகாப்புடன் நாட்டை யாள்பவர்களை வாய்ச்சொல்லால் காந்தியார் வெளியேறுங்களென்று கூறுகின்றார். மேற்கூறிய போர்க்கருவிகளுமின்றிப் போர்முறையையும் அறியாதாராய நாட்டிலுள்ளமக்களின்நலன்களையெல்லாம் சூழ்ச்சியால் தாங்களே முன்னின்று அனுபவித்துக்கொண்டு பூதேவர்கள் என்று இறுமாப்புடன், பிறரையெல்லாம் சூத்திரர்எனஇழித்துரைத்துக் கொண்டு இந்நாட்டில்வதியும் ஆரியர்களை நோக்கி இத்திராவிடமாணவர் மாநாட்டினின்று கூறுகின்றேன் "ஆரியர்களே! நீங்கள் இந்நாட்டிற்கு ஆடு, மாடுகளையோட்டிக்கொண்டு வயிற்றுப் பிழைப்பிற்கு வந்தீர்கள், எங்கட்குச் சூத்திரர் என்றபட்டம் சூட்டி அடக்கியாளவல்ல. நீங்கள் இங்குவந்திருந்து நிகழ்த்திய திருவிளையாடல்கள்போதும். இனி நீவிர் நும்மனைவி மக்களுடன் மரியாதையாக இந்நாட்டைவிட்டு வெளியேறிவிடுங்கள் (பெருங்கைதட்டொலியும், ஆரவாரமும்) நீவிர் மரியாதையாக இந்நாட்டைவிட்டு வெளியேறவில்லையெனின், எங்கள் திராவிடமாணவர்கள் மரியாதையற்றமுறையில் உங்களைவெளியேற்றுவார்கள். (மீண்டும் கைதட்டொலியும், ஆரவாரமும்) சுவாமிகாள் நல்லமுறையிற் சென்றுவிடுங்கள் (சிரிப்பும் ஆரவாரமும்) அன்பர்களே! பிரித்தானிய அரசாங்கம் உலகநாகரிகத்தைக் காப்பாற்றுவான்வேண்டி உலகப்பெரும் போரில் ஈடுபட்டுள்ளது. இவ்வரசாங்கம் இப்போரில் உலகநாகரிகத்துக்குப் பகைவராய்த் தோன்றியுள்ள, "ஹிட்லரையும்," "முசோலினி"யையும், ஜப்பானியக் குள்ளர்களையும் புறங்கண்டு வெற்றியுறத் திராவிட மாணவர்களாகிய நீங்கள் உங்களாலியன்ற உதவியைச் செய்யவேண்டு

(7ம்பக்கம் பார்க்க.)

தொடர்கதை

# பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறன். குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகித்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. குருக்கள் குமாரகுருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகம் உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு, நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளி நடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம் செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அங்கு லேடிடாக்டர் லலிதா தன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]

எதிர்பாரா முத்தம், என்னை என்னவெல்லாமோ எண்ணிடச் செய்தது. என் உறுதி போன இடம் தெரியவில்லை! ஆடவர்களின் துடுக்குத்தனம், என்னிடம் நடவாது, நான் தொட்டால் துவளுபவளல்ல, என்று பேசிக்கொண்டிருந்த முடுக்கு எப்படித் திடீரென முறிந்து போய் விட்டது என்பது எனக்கு விளங்கவில்லை. சற்று உற்று நோக்கினால், முகத்தைச் சுளிப்பதன் மூலமே ஆடவரை விரட்டியடிக்கமுடியும் என்று வாதிட்டு வந்த நான், அந்த ஓவியக்காரன் தந்த திடீர் முத்தத்தைப் பெற்றுத் திடுக்கிட்டேன், ஆனால் அவனுடைய செயலைத் தடுக்க முடியவில்லை! அவன் என்னை நோக்கி நடந்ததும், நான் அவனை நெருங்கியதும், அவனுடைய கரங்கள் என் உடலைத் தழுவியதும், எமது இதழ்கள் கூடியதும், ஒரு விசித்திரமான கனவு போலவே இன்னமும் எனக்குத் தோன்றுகிறது. இவ்வளவு தானா பெண்களின் உறுதி! என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

"கோபமா, கோமளமே! என் கோரிக்கையை ஈடேற்றிவைத்த அஞ்சிதமே! என் வாழ்க்கைவிருந்தாக வந்தமைந்த வடிவழகி! வா! இன்னமும் கூச்சம் எதற்கு? நீ எனக்கு, நான் உனக்கு என்று, ஏற்பட்டது இன்று நேற்றல்ல! இந்த ஜென்மத்தில்லல்ல!" என்று ஓவியக்காரன் கூறிக்கொண்டு, என்னை ஒரு பீடத்திலே உட்காரவைத்தான்.

"என்ன இருந்தாலும், நீங்கள் செய்தது மிகவும் தவறு" என்று நான் கூறினேன்.

"தவறுதான்! மன்னிக்கப்படமுடியாத குற்றந்தான். மாபாவி நான், மகேஸ்வரிக்குச் சமமானவள் நீ!" என்று ஓவியக்காரன் சொன்னது, என் செவிக்கு ஒருவகைச் சங்கீதம்போல இருந்தது. "ஆமாம்! ஆடவரின் முறையே இதுதானே! தகாத செயலைச் செய்துவிடுவதும், தட்டிக்கேட்டால் தழதழப்பதும், அவர்களின் வழக்கந்தான்" என்று நான், கூறினேன். கோபக்குறிகளோடு பேசினதாக நான் எண்ணிக்கொண்டேன், ஆனால் என் செவிக்கே, என் சொல் கொஞ்சுவது போலிருந்தது, நான் ஆச்சரியப்படாமலிருக்க முடியுமா!

"அன்பே! அன்று உன் தந்தை என்னை அரசமரத்திலே கட்டிவைத்து, அடித்தாரே, அப்போதுகூட எனக்குத் துக்கம் வரவில்லை. நீ மாடியிலே நின்றுகொண்டு, தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தாய், அதைக்கண்டதும், என் இன்பவல்லியின் இருதயம் என்னிடம் இருக்கும் போது, இரும்புமனம் படைத்தவனின் சவுக்கடி என்னை என்ன செய்யமுடியும், என்று எண்ணி மகிழ்ந்தேன்" என்று கூறினான், இந்தச் சம்பந்தமில்லாத, புரியாத பேச்சைக்கேட்டு "என் தந்தை உம்மை அடித்தாரா? நீர் பேசுவது புரியவில்லையே" என்று நான் கேட்டேன்.

"எப்படியும், இது போன ஜென்மத்திலே நடந்ததாயிற்றே. உனக்குத் தெரியாது." என்று ஓவியக்காரன் கூறினான்.

"போனஜென்மமும், புதுஜென்மமும், இதென்ன பித்தம்" என்று கேட்கநினைத்தேன், ஆனால் அவன், என்னைப்பேசவிடவில்லை. "உட்கார்! குறுக்கே பேசாமல் இதைக்கேள். போனஜென்மத்திலே நீ ஓர் இசைவாணன். நாம் காதலர்கள் நமது காதலை உன் தந்தை தடுத்தார். என்னைச் சிரச்சேதம் செய்தார். வெட்டுண்டு கீழே உருண்ட என் தலை, உன்னிடம் தரப்பட்டது. அதைக்கண்டாய், உன் உயிர் பிரிந்தது. மேலுலகிலே தீர்ப்புக்கிடைத்தது, இந்த ஜென்மத்திலே நமது காதல் ஈடேற வேண்டுமென்று. அந்தநாள், இன்று பிறந்தது." என்று, உபதேசியார்போல, அமைதியும் கெம்பீரமும் தொனிக்கக்கூறினான், என் உடல் பயத்தால் உதறலாயிற்று, சரியான பித்தனிடம் சிக்கிவிட்டோம். இனித் தப்பமுடியாது, என்று திகில் பிடித்தாட்டிற்று. பதறிய என்னை அவன் பஞ்சவர்ணக்கிளியே! பத்தரைமாற்றுள்ள தங்கமே! பதுமலோசனி! பரிமளவல்லி! பிரியவம்தே! பிரேமாவதி! என்று ஏதேதோ கூறித்தேற்றினான், அவன் முன் ஜென்மத்தைப்பற்றிக் கூறியது, அவனுடைய மனப்பிராந்தி என்பது எனக்குத் தெரிந்தது, திகில்பிறந்தது என்றபோதிலும், அவனுடைய பார்வையும் பேச்சும், என்னை எப்படியோ அவன் வயப்படுத்திற்று. கோபம் குறைந்தது, பச்சாதாபம் மேலிட்டது. அவனுடைய நிலைமையைக் கண்டு நான் வருந்தலானேன். எவ்வளவு திறமையுள்ளவனாக இருக்கிறான் சித்திரம் வரைவதிலே, இவனுடைய சித்தம் இவ்வளவு சீர்குலைந்து விட்டதே என்று எண்ணி இரக்கங்கொண்டேன்.

"உங்கள் மனம் ஏதோ குழம்பி இருக்கிறது. முன்ஜென்மம், பழயகாதல், என்றெல்லாம் பிதற்றுகிறீர். யார் காதிலாவது விழுந்தால் கேலிசெய்வார்கள்" என்று நான் மெள்ளச்சொன்னேன். கள்ளங்கபடறியாச் சிறுவன்போல, அவன், "ஆருயிரே! உனக்குப்பிடிக்கவில்லையானால் நான் முன்ஜென்மத்தைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொள்கிறேன். ஆனால் உண்மையே நான் உரைத்தது, நீ ராஜகுமாரிதான், நான் இசைவாணன், இருவரும் காதலால் இறந்தோம், இது சத்தியம்" என்று சொல்லிவிட்டு, நீர் ததும்பும் கண்களுடன் என்னை நோக்கி, "என்னைப் பிரியமாட்டாயே. நீ பிரிந்தால், என் உயிர் பிரியும்" என்று கெஞ்சினான். நான் "இல்லை கண்ணே! நான் உன்னைப்பிரிவேனா?" என்று கூறினேன், கூறிவிட்டதும், அடடா, என்ன பைத்யக்காரத்தனம், என் இவ்விதம் கூறினேனும் என்று எண்ணினேன். அவனோ, என் சம்மதத்தைப் பெற்றுவிட்டதால் பூரிப்படைந்து, மேலும் முத்தமிடத் தொடங்கினான், என்னால் அவனைத் தடுக்கமுடியவில்லை!! ஆரம்பமே, இப்படி ஜுரவேகத்திலே இருந்தது, விளைவு எப்படி இருந்திருக்கும், என்று கூறவேண்டுமா. நான், என்னை அவனிடம் ஒப்படைத்து விட்டேன். நெடுநாட்களுக்குப்பிறகே, அவன் பார்வையாலும் பேச்சாலும் பிறரைக் கட்டுப்படுத்தும் முறையைப் படித்துப் பயிற்சிபெற்றவன் என்பது, எனக்குத் தெரியவந்தது. அவன் ஓர் பித்தனல்ல

(6ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 12—3—44 ஞாயிறு


## மூன்றுவது ஆண்டு.

—o—

மூன்றுவது ஆண்டு ஆரம்பமாகிவிட்டது "திராவிடநாடு" இதழுக்கு. கொந்தளிப்பிலே பிறந்து, தத்தளித்துத் தள்ளாடி நடந்து வழுக்கு நிலத்திலே சருக்கி விழாது, அன்பர்களின் உதவி எனும் ஊன்றுகோலின் உறுதுணையால், கடமை எனும் களத்திலே, "திராவிடநாடு" முன்னேறி, மூன்றுமாண்டெனும் இடத்திலே இன்று நின்று, கடந்துவந்த இடத்தை ஒரு கணம் பார்த்துவிட்டுப், பெருமூச்செறிகிறது, ஆனால் மறுகணம் புன்னகை கொள்கிறது-முன்னதன் காரணம் பட்ட கஷ்டம், புன்னகையின் காரணம், உமது ஆதரவு! இனிச்செல்லவேண்டிய இடம், சொல்லவேண்டிய பொறுப்பு, 'திராவிட நாடு' நடைபெற உதவிவுரிந்துவரும் நண்பர்களுடையதே!

ஒருகணம் நின்று பார்த்ததிலே, உள்ளத்திலே தோன்றித் தாண்டவமாடிய எண்ணங்கள் எத்தனை என்று கருதுகிறீர்கள்! ஆரம்பகாலத்திலே, ஆரூடம் கணித்தவர்கள் எவ்வளவு! அசைத்ததலையும், சிமிட்டிய கண்களுமாக நின்று, இழமை இதழையாவது இந்தக்காலத்திலே ஒருதொண்டன் நடத்துவதாவது! என்று கேலிபேசினவர்கள் கொஞ்சமா! அவர்களின் பயமுறுத்துதலை உறுதிப்படுத்தும் விதத்திலே, பாராட்டுக் கடிதத்திலே கடைசிவரியாக, பணம் அடுத்த மாதத்திலே பழயபாக்கியுடன் சேர்த்தனுப்பி வைக்கிறேன் என்று எழுதியவர்களின் எண்ணிக்கைஇலே சென்றுகூறிவிட முடியுமா? காகிதப்பஞ்சமும் பணமுடையும், நம்மைச் சீமான்களிடம் தஞ்சம் புக வைத்தேதீரும் என்று ராஜதந்திரம்பேசினவர்கள் உண்டு! விளம்பரமே இல்லை, இதுபோல், பத்திரிகை நடத்துவதால் வரும்பெரும் தொல்லை கேளப்பா என் சொல்லை, என்று புத்திகூறினவர்கள் உண்டு. ஆம்! "திராவிடநாடு," துவக்கத்திலேபட்ட "தொல்லை" கட்சிக்காகவும் கொள்கைக்காகவும் நடத்தப்படும் எந்தப் பத்திரிகைக்கும், இயல்பாக ஏற்படக்கூடியதே யாகையால் நாம் மனமுடையவில்லை, என்ன நேரிடுமோ, எப்படி ஆகுமோ, என்று மருளவில்லை, எவ்வளவோ உழைத்தும் உருவானபலனைக்காணோமே என்று சலித்துக்கொள்ளவுமில்லை, கடமையைச் செய்வோம், விளைவுபற்றிய கவலைநமக்கு வேண்டாம், காலத்தின் கருவியாக இருப்போம், புரட்சிப்பொறியாக விளங்குவோம், புன்னகையால் இலயித்துவிடவும் வேண்டாம், பொல்லாங்கான பேச்சாலும் செயலாலும்பீதியடையவும் வேண்டாம், இலட்சியத்துக்காகப் பாடுபடுவோருக்குக் கஷ்டநஷ்டத்தைத் தான் உலகு காணிக்கையாகச் செலுத்துவது வாடிக்கை, எனவே கலக்கமின்றிப் பணிபுரிவோம், கைகொடுக்கும்பொறுப்பு அன்பர்களுக்குரியது, என்ற எண்ணத்திலே பணிபுரியலானோம், அன்பர்கள் கைகொடுத்தனர். கணக்குப் புத்தகம்இப்போதும் கடுகடுத்தமுகத்தைத்தான்காட்டுகிறது, ஏஜண்டுத் தோழர்களிலே பலர், இன்னமும் பணத்தைச் சரியாக அனுப்பவில்லை. வாசகர்கள் பணத்தைச் செலுத்தவில்லை என்று சமாதானம் கூறுகிறார்கள், இந்நிலையை வளரவிடுவதுசரியில்லை என்று கூறாதிருக்க முடியவில்லை. இந்தச் சிரமத்தை நாம் பெற்று, சித்தம்சிதைந்த நேரத்திலே, செந்தமிழ் நாட்டுத் தோழர்கள் தந்த பேருதவியைநாம் என்றும் மறப்பதற்கில்லை. எனது நன்றியறிதலை அதற்கு ஈடாகத் தருவதாகக்கூறுவது, பெற்ற உதவியின் மதிப்பைச் சரிவரஉணராத குற்றத்தின்பால் எம்மைச் சேர்க்கும் என்று அஞ்சுவதால், எந்த இலட்சியத்துக்காக "திராவிடநாடு" பணிபுரிகிறதென்று அன்புகொண்டு உதவி அளிக்கப்பட்டதோ, அந்த இலட்சியத்தை வழுவவிடாது காப்பாற்றும் கடமையிலே நாம் சளைக்க மாட்டோம் என்ற உறுதியைத் தெரிவிப்பதே சிறந்ததென்று கருதுகிறோம்.

"திராவிடநாடு" தன்மானமுரசாகத் திகழவேண்டும்என்பது நமது குறிக்கோள். சமுதாயக்கோளாறுகளைவிளக்கி, புத்துலக ஆர்வத்தைக்கிளப்பி, பூசுரரின் ஆதிக்கத்தை அழித்துத், திராவிட இன எழுச்சியை அடிப்படையாகக்கொண்ட இனஅரசைஅமைக்கவேண்டும், என்ற குறிக்கோளுக்குஉதவிசெய்யும் விதமாகவே அரசியல்காரியம் இருக்கவேண்டும், என்பது நமதுநோக்கம். இந்த இலட்சியத்துக்கு இடையூறாகஇருக்கும் எதனையும் எடுத்தெறிந்துவிட்டு நடக்கவேண்டும் என்பது நமதுவேலைத்திட்டம். இந்தக் காரியத்தைத் "திராவிடநாடு"செய்து வந்திருக்கிறது, இனியும்செய்யும், செம்மையாகச்செய்ய முயற்சித்துவருகிறது. 'திராவிடநாடு' இதழின், தோற்றத்திற்குமுதற் காரணம் நமதுநண்பரும், செல்வமும் சுயமரியாதைஆர்வமும் நிரம்பியவரும் இளைஞருமாகிய தோழர் T. P. S. பொன்னப்பனாரின், தூண்டுதல்தான்! பத்திரிகையின் ஆரம்பகாலக்கஷ்டங்களின்போது உதவிபலபுரிந்தவர். பார்சல் கட்டுவதுமுதற்கொண்டு பாரமான பேப்பர்க்கட்டுகளை புரட்டுவதுவரையிலேபணிபுரிவதுகண்டு ஆச்சரியப்பட்டவர்கள் சிலர்; ஏன் இந்தஆளுக்கு இந்தச்சிரமம் என்று ஆயாசமடைந்தவர்கள் பலர், இந்தப் பத்திரிகைவேலையிலே இவர் ஈடுபட்டிராவிட்டால், நாம் இவருடன் இன்னம் அதிகமாகப்பொழுதுபோக்கலாமே என்றுகருதிய சுகபோகிகள் சிலர். இந்தச்சுற்றுச்சார்புக்கும், அவர்மனதிலே இருக்கும் இலட்சியத்துக்கும் இடையேஇடையறாத போர்! ஒவ்வோர் சமயம் ஒவ்வோர் சக்தி வெற்றிபெறும். இந்தநிலைமையைஉணர்ந்து இலட்சியமேஇறுதியில்வெல்லும்என்று நாம் நம்பிவந்தோம், அதற்கேற்பவே, அவருடையஉதவியும், "திராவிடநாடு" தோன்றவும், வளரவும் காரணமாகஇருந்தது. இன்றும், பணிமனை, அவருடைய இல்லத்திலேதான்.

மற்றும்காஞ்சியிலுள்ள தமிழரியக்கத் தோழர்கள் பலரும், "திராவிடநாடு" பத்திரிகைக்கு அவ்வப்போது ஆற்றிவந்த உதவியை நாம் பாராட்டவும், நன்றிகூறவும் கடமைப்பட்டிருக்கிறோம். முக்கியமாகப், பணிமனையிலே இருந்துவரும் ஈழத்தடிகளின் உதவிகுறிப்பிடத்தக்கது.

இரண்டாம்ஆண்டுஆரம்பத்திலே, நாம், ஒருநிரந்தரஉதவிஅமைப்புத்திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தது அன்பர்களின் நினைவிலிருக்குமெனக் கருதுகிறோம். அதாவது, இயக்கப்பத்திரிகைகட்கு இடையறாததொல்லைகள் நேரிட்டுவருவது இயல்பு. ஆகலால், இயக்கஅன்பர்களின்உதவிபெற்றேதீரவேண்டிய அவசியமிருக்கிறது, இதற்காகத்தனியாக உதவிதிரட்டுவதற்குப்பதிலாக, பத்திரிகையின் உதவிநிதிதிரட்டுவதுடன் பிரச்சாரமும்நடைபெறக்கூடியவிதத்திலே, ஒருநாடகக் கழகம் நிறுவியுள்ளோம், அன்பர்கள் ஆங்காங்கு நாடகங்கட்கு ஏற்பாடுசெய்வதன்மூலம், ஒரேசமயத்தில் இரண்டு நன்மைபுரிந்தவராவர் என்று எடுத்துக்காட்டினோம். "சந்திரோதயம்" என்றநாடகம், இரண்டு மூன்று மகாநாடுகளிலேகாணக்கூடிய பிரச்சாரத்தைச்சில மணிநேரங்களிலே புகுத்தக்கூடிய விதமானது. இதனைநடத்துவதன்மூலம், பத்திரிகைக்கு உதவிசெய்வதுடன், கொள்கைகளைப்பரப்பும் பேருதவியும்செய்தவராவீர்என்று விளக்கிஇருந்தோம். அன்பர்களும் இக்கருத்தைக்கொண்டு, திருவத்திபுரம், திருச்சி, சிதம்பரம் ஈரோடு, சென்னை ஆகியஇடங்களிலே, நாடகத்தை நடத்திவந்தனர், நல்லமுறையிலே. இவ்வாண்டு, மேலும்பலஊர்களிலே நாடகம்நடத்தப்படவேண்டும், நண்பர்கள் இதற்கான உதவிபுரியவேண்டுகிறோம்.

'திராவிடநடிகர் கழகம்' என்றஅமைப்பிலேஇருந்து, பத்திரிகைக்குப்பணஉதவி கிடைக்கும்படிசெய்துவரும், நண்பர்களுக்கு, நமது நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம். சிலரை, உங்கட்கு அறிமுகப்படுத்தவிரும்புகிறோம். நாடகத்திலே ஆரியப்புரோகிதராக நடிக்கும் அண்ணாமலை எனும்நண்பர், வேடத்திலே வயோதிகராகத் தோற்றமளிப்பார்; வாலிபர், அழகான ஆரியநடைநடந்துகாட்டுவார் நாடகத்திலே, வாழ்க்கையிலே தமிழ்ப் பண்புமிளிரும்விதத்திலே இருப்பவர். திடீரெனமுளைத்து, காலைபயிராகி மாலையிலேகருகும் ஆர்வக்காரரல்ல, ஆழ்ந்தபற்றுகொண்டவர், இந்திஎதிர்ப்புக்காலத்திலே

சிறைசென்றவர், செந்தமிழில் ஆர்வமும் பொதுப்பணியில் பிரியமுங்கொண்டவர், காஞ்சிவாசி, இயக்கத்தொண்டர்களின் விசுவாசி, வாழ்க்கையைநடத்த வாணிபத்துறையிலே ஈடுபட்டுள்ள ஒரு வீரஇளைஞர். அவருக்கு மனைவியாக-நாடகத்திலே!—நடிக்கும் நண்பர் துரைக்கண்ணு எண்பவர், கோவைநகரிலே, மின்சாரஅமைப்பொன்றிலே பணிபுரிபவர், நல்லமனப்பாங்கும் இயக்கப்பற்றும் கொண்டவர். புரோகிதருக்கு உதவியாக வரும், 'ரசவாதி' வேடமணிபவர், நீண்டநாளையச் சுயமரியாதைக்காரர், குடிஅரசு வாசகர், முனிசிபல் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று, ஓய்வை இயக்கத்துக்குச்செலவிடும், வயோதிகர், பண்பில்லை—பருவத்தில்மட்டும்—பெயர் பார்த்த சாதி;முதலியார் என்றுகுடும்பத்தினர்கூறுவர், அவருக்குஅந்தவால்கூடாது, என்றகொள்கை, ஆகவேதான் நாம் அதனைச்சேர்த்தோமில்லை. மிராசுதாரரும், முனிசிபல் கவுன்சிலராக இருந்தவரும், கள்ளமறியாஉள்ளமும், பணிசெய்கையில் பள்ளம்மேடறியாமல் பாயும் சுபாவமும் கொண்டவரும், இயற்கையான நடிப்புத்திறன்கொண்டவருமான தோழர் இராசகோபால் நாடகத்திலே புரோகிதரைஆட்டிப்படைப்பதைக்கண்டவர்கள் மறக்க முடியாது, காணாதவர்கள் கண்டுதீர வேண்டும், அவ்வளவுஅருமை அதிலே இருக்கிறது. வாழ்க்கையிலே, புரோகித்தை நீக்கமுயலுகிறார்என்ற அளவே கூறவேண்டிஇருப்பதற்காக வருந்துகிறோம்; மற்றும் சுந்தரேசன், கோவிந்தராஜன், நாராயணசாமி, முனுசாமிஎனும் பலதோழர்கள், கழகத்திலே உள்ளனர். நாடகத்திலேகதாநாயகனுகக்காட்சிதரும் தோழர் சாமிநாதன், பத்தாம்வகுப்புத்தேறியவர், மேற்படிப்புக்குப்போக வேண்டியவர், நாடகத்திலே அபாரமான பிரியம்கொண்டவர், நமது இயக்கத்திலே பற்றுக்கொண்டவர். கதாநாயகியாகநடிப்பவர், சௌராஷ்டிரர் என்றுசொன்னால் பலர் நம்பமாட்டார்கள், தமிழ் அவ்வளவு தெளிவாகப்பேசுபவர், வாலிபத்தின் வாசற்படியிலே நிற்பவர், நெசவுத்தொழில் ஈடுபட்டவர், பொதுமேடைகளிலே பேசும் பக்குவம் வாய்ந்தவர், பெயர் வெங்கடராமன். ஈழத்தடிகளும், பொன்னைப்பனும், முன்பே குறிப்பிடப்பட்டுவிட்டதால் இந்தப்பட்டியிலே சேர்க்கவில்லை. வியாபாரத்தொழில் ஈடுபட்டவரும் கௌரவமாஜிஸ்ட்ரேட்டாக இருப்பவரும், சுயமரியாதைக்காரரும் (சொல்லிலும் செயலிலும்) பெரியாரின் பெரும்படையிலே நெடுநாட்களுக்குமுன்பே சேர்ந்தவருமான தோழர் போளூர் சுப்பிரமணியம், வேலைக்காரவீராசாமியாக நடிக்கிறார்-ஆசாமிபலே வேலைக்காரன், என்றுபுகழாதார்இல்லை, அவ்வளவு நடிப்புத்திறமை இயற்கையாகஅமைந்திருக்கிறது இவரிடம். பக்திப்பிராபவத்திலே பலநாள் இருந்துபார்த்துப் பின்னர், பகுத்தறிவே சிறந்தபாதைஎனக்கண்டு, நமது இயக்கத்திலேபுகுந்த சீர்திருத்தக்காரரின் திருமகனார், தோழர் சீனுவாசன் என்பவர், மடாதிபதியாகநடிக்கிறார் "இந்திரியங்களெனும் துட்டக்குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளம்இட்டு அடக்கவேண்டும்" என்றுஉபதேசம்புரிவார், தம்பிரான்கள் பாடங்கேட்கக்கூடவருவார்கள், அவ்வளவு திறமையாகநடிக்கிறார். மற்றும் பலர். இவர்கள்யாவருக்கும் "திராவிட நாடு" தனதுநன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது. கட்டுப்பாடான அமைப்பின்மூலம், எத்தகையபலனைப் பெறலாம், என்பதற்கு எடுத்துக்காட்டாக, கழகம் இன்றுவிளங்குகிறது. இது மேலும்வலுவடைய ஒரு வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. M. S. B. S. சபையிலே பலவருடம்இருந்து இப்போது வெளியேறிய, வீரவாலிபர், பகுத்தறிவைப்பேச்சாலும் எழுத்தாலும், நாடகத்தாலும் நாட்டுக்குப்பரப்பவேண்டும் என்றநோக்கமுடைய, நடிகர் நாராயணசாமி, கழகத்திலேசேர்ந்துள்ளார், பணிபுரிய, பலதோழரைப் பயிற்றுவிக்க, இயக்கத் தலைவர்களின் பேருதவிபெற்று,த் தொழில்முறையிலே சீர்திருத்தநாடகக் குழுஅமைக்க, அவருடையஉதவி, திராவிட நடிகர் கழகத்தை வளப்படுத்தும். நாடகசமயத்திலே, ஆங்காங்கு உதவி புரிந்த அன்பர்களுக்கெல்லாம் "திராவிட நாடு" நன்றிகூறுகிறது. நாடகசமயத்திலே நன்கொடைதந்தும், டிக்கட்டுகள் வாங்கியும் உதவிசெய்தநண்பர்களுக்கும், திராவிடநாடு பத்திரிகைக்கென்று தனியாகவேஉதவிஅனுப்பிய பேரன்பர்களுக்கும் கட்டுரைகள்உதவிய எழுத்தாளர்கட்கும், கவிதைகள் தந்துஉதவிய கவி கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்கட்கும், எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இயக்கப்பத்திரிகைகளை விற்பனைசெய்வதிலுள்ள சிரமம், நாம்அறிந்ததே. அந்தச்சிரமத்தைஏற்று நமக்கு ஏஜண்டுகளாகஇருந்துவரும் தோழர்கள் நமக்குப்புரியும் உதவிக்காக அவர்களுக்கு எமது நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம், பல்சக்திகள் பலதுறைகளிலேநின்று இயங்கும்நிலை தமிழகத்திலே உண்டானதற்கு மூலகாரணமாக இருக்கும், **பெரியார்** அவர்கள் நமக்கு அவ்வப்போது புரிந்துவரும் பேருதவிக்காக அவருக்கு எமதுநன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

## எஸ். ஆர். சுப்ரமணியம்.

திருப்பூர்தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் மார்ச்சு மாதம்முதல் 3வருடங்களுக்கு திருப்பூர் முதல் வகுப்பு கௌரவ மாஜிஸ்திரேட்டாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

## இந்திய சர்க்காரின் வரவு செலவு திட்டம்.

நடைபெறும் வருஷத்தின் மொத்த வருமானம் 254,50கோடிரூபாய். மொத்தச்செலவு ரூபா 346.93 கோடி. துண்டு விழும் தொகை ரூ. 92.43கோடி. இராணுவச்செலவு ரூ. 262.64 கோடி.

1944-45 வருஷத்து மொத்த வருமானம் ரூ. 284,97கோடி. மொத்தச்செலவு ரூ. 263,18 கோடி. துண்டுவிழும் தொகை ரூ. 78,21 கோடி. இராணுவச் செலவு ரூ. 276,61 கோடி.

அடுத்தவருஷம் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய புதுவரிகள் விதிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

### புதுவரிகள் விபரம்.

வருமான வரி ரூ. 2000க்கு குறைந்த வருமானத்துக்கு இல்லை; 10,000க்கும் 15,000க்கும் இடையேயுள்ள வருமானப் பகுதியில் சர்ச்சார்ஜ் 16 தம்பிடியாக இருப்பது 18 தம்பிடியாக உயர்த்தப்படுகிறது.

15,000-க்கு மேற்பட்ட வருமானப் பகுதியின்மீது சர்ச்சார்ஜ் 20 தம்பிடியாக இருப்பது 24 தம்பிடியாக உயர்த்தப்படுகிறது.

சூபர்டாக்சில் ரூ. 25,000க்கு மேற்பட்டு 2 இலட்சம் வரையுள்ள வருமானப் பகுதிக்கு சர்ச்சார்ஜ் அரையணு அதிகரிக்கிறது.

கார்ப்பரேஷன் வரி ஒரு அணு உயரும். (இதில் சில சந்தர்ப்பங்களில் அதிக வரிக்கு வஜா உண்டு.)

அமிதலாப வரி மாறவில்லை. ஆனால் வரியின் 5ல் ஒரு பாகத்துக்கு சமமான தொகை கட்டாய டிபாசிட்டாக சர்க்காரிடம் வைக்கப்படவேண்டுமென்பதற்கு பதிலாக 64க்கு 19வீதம் (ரூபாய்க்கு 4¾ அணு வீதம்) கட்டாய டிபாசிட்டாக வசூலிக்கப்படும். வருமானவரியை முன்பணமாக செலுத்துவதுபற்றி சில விதிகள் இயற்றப்படுகின்றன.

இறக்குமதி வரி, விஷயமாக இப்போதுள்ள சர்ச்சார்ஜ் நீடிக்கும். புகையிலைப் பொருள்கள், சாராயவகைகள்மீது சர்ச்சார்ஜ் 20% ஆக இருப்பது 50% ஆக உயரும்.

புகையிலைவரி, விஷயத்தில் உள்ளநாட்டுச் சுங்கம் அதிகரிக்கும்.

பாக்கு, காப்பி, தேயிலை, இவற்றின் மீது பவுண்டு 1க்கு 2அணு வரிபோடப்படும்.

## பெயரிடல்.

விடுதலைத்துணை ஆசிரியர் தோழர் எ சங்கரய்யாவின் வாழ்க்கைத்துணைவியார் தோழியர் கனகாம்பாள் அம்மையார் பெற்றபெண் மகவுக்கு 'நாகம்மை' என்ற பெயரிடப்பட்டிருக்கிறது.

# பார்வதி பி, ஏ;

3-ம் பக்கத்தொடர்ச்சி.

பதும் விளங்கிவிட்டது. ஆனால், நான் இதற்குள் ஒருதாயானேன்! கல்லூரியிலே கைகொட்டி நகைக்காதவர்களில்லை. இவ்வளவு ஈனத்தனமானவளா! என்றுகூறிப் புரபசர் பாஸ்கரன் கேலிபேசினாராம். மாணவமணியோ "எனக்கு முன்பே தெரியும், அவள் ஒரு ஞானசூன்யம் என்று" எனக்கண்டித்தாராம். திலகாவுக்கு மாதக்கணக்கிலே வம்பளப்புக்குச் சரக்கு கிடைத்தது. என்வீட்டார், வாசற்படியிலேகால்வைக்காதே என்றுகடுமையான உத்திரவிட்டார்கள். நான் படிக்கவும் பிழைக்கவும், அவர் தீட்டியசித்திரங்களே உதவின. நான், டாக்டராவதற்கும் அவருக்குப் பித்தம்முதிர்ந்து, சிகிச்சைசாலை செல்வதற்கும் நேரம் சரியாகஇருந்தது. என்குழந்தையோ இறந்தது. காதலரோ பித்தர்விடுதியில். நானேஇங்கு, உல்லாசி, என்று ஊராரால் கூறப்படுகிறேன். என் வேதனையை நான்யாருக்கும் கூறுவதில்லை. நானாகத்தேடிக்கொண்டதொல்லையை, எப்படிக்கூறுவது. கூறினால், யார் என்சொல்லைநம்புவார்கள். இதுவே என்கதை. வாலிபத்திலேவளைந்த பூங்கொடிகள் இந்தஉலகிலே பலஇலட்சமிருக்கும். அதிலே நான்ஒருவள். அந்தரகத்தைச்சேர்ந்த உத்தமிக்கு உதவிசெய்வதிலே எனக்குச்சந்தோஷம் இருப்பது முறைதானே! நான் ஒரு ஓவியக்காரனின் காவியக்கண்களால் மயக்கப்பட்டு, வாழ்க்கையிலே, வழுக்கினேன். உத்தமி, நரசிம்மனின் நயவஞ்சகத்தால், கருவுற்றாள். என்னை என்வீட்டார் நிராகரித்தனர், இல்லையானால், அவர்களை உலகம் நிராகரித்துவிடும் என்றபயம் அவர்களுக்கு. உத்தமிக்கு அவ்விதமான ஆபத்தில்லை. நான்அவளைக் காப்பாற்றுகிறேன். அவள் என் இனம்! எனக்கும் அவளுக்கும் ஒரேவிதமானமனம்!" என்று லேடிடாக்டர், லலிதகுமாரி, தனதுவரலாற்றைக் கூறிமுடித்தாள். (தொடரும்.)

---

## ஓயாமழை.

காஞ்சீபரத்தில் ஒருவாரமாக ஓயாமழையாக இருந்ததால், போக்குவரத்து அசௌகரியத்தை முன்னிட்டு, சென்னையில் திருமண நிகழ்ச்சிக்கும், சர். செல்வம் நினைவு நாள் கூட்டத்திற்கும், செல்ல இருந்த தோழர் அண்ணாத்துரை, மேற்படிநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமற்போய் விட்டது.

## சந்திரோதயம்.

குடந்தை தோழர் V. சின்னத்தம்பி அவர்களின் இளையசகோதரர் தோழர் V. ராஜமாணிக்கத்தின்வாழ்க்கைத்துணைவியார் ருக்மணி அம்மையார் பெற்ற பெண்மகவிற்கு "சந்திரோதயம்" என்ற பெயரிடப்பட்டிருக்கிறது.

## தோழியர் கொல்லன்டாய்

நம் நாளிலுள்ள தலைசிறந்த ஸ்திரிகளில் ஒருவர் பின்னிஷ் நெருக்கடியைத் தீர்க்கும் வேலையில் முதன்மையானஸ்தானம் வகித்துவருகிறார். ஸ்டாக்ஹோமில் சோவியத்தூதுவராக இருக்கும்தோழியர் அலெக்ஸாண்டரா கொல்லன்டாய் என்பவர் தான் அந்தமாது என்று டெய்லி மெய்லின் ஸ்டாக்ஹோம் நிருபரான ரால்வ் ஹெவின்ஸ் எழுதுகிறார்.

72 வயதிலும் பிரகாசமான கண்களுடன் விளங்கும் இந்தச்சின்னஞ்சிறுகிழவி ஸ்டாலினுடைய பூரணநம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிறார்.

தோழியர் கோல்லன்டாயின் வாழ்க்கையே மிகவும் விசித்திரமானது. ஜார் மன்னர்களின் காலத்திலே, இவர் புகழ்பெற்ற கட்டழகியாக விளங்கினார். பிறகு அபேதவாதக்கட்சியில் சேர்ந்துகொண்டு காதல் சுதந்திரத்திற்காகவும் கர்ப்பத்தடைக்காகவும் சிறிதும் அச்சமின்றி ஒரு பெரிய இயக்கத்தை நடத்தினார். இதற்காக சைபீரியாவில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பிற்பாடு வாரோஷிலாவ், மாக்ஸிம் கோர்க்கி இருவருக்கும் ஆப்தநண்பராக ஆகிவிட்டார்.

சிலகாலம் லெனினுக்கு அந்தரங்கக்காரியதரிசியாக இருந்தார். 1922ல் தோழியர் கொல்லன்டாய் நார்வேயில் சோவியத் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். பிறகு 1927ல் மெக்ஸிகோவுக்கு சோவியத் பிரதிநிதியாகச் சென்றார்.

---

# மதுரையில்

★

ஏப்ரல் 9ந்தேதி

# சந்திரோதயம்.

---

## சென்னை S. I. L. F.

சென்னைநகர, தெ. இ. ந. உரிமைச் சங்கத்தினாதரவில், சென்றகிழமை பெத்துநாயக்கன்பேட்டை காசிவிசுவநாதர் கோயிலருகில், தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில்நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர்கள் நடேசமுதலியார், D. V. நாராயணசாமி, அண்ணாத்துரை, பொன்னம்பலனார், ஆகியோர் "தமிழர்நிலை" என்பதுபற்றிப்பேசினர்.

## திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர்மன்ற ஆண்டுவிழா.

20—2—44 காலை 9½மணிக்கு திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் ஷை ஆண்டுவிழா தோழர் G. இராமானுச முதலியார் தலைமையில் தொடங்கப்பெற்றது. இன்னிசைக் கணபதி, சு. இராமனாதன் இருவரும் கவி பாரதிதாசன் பாடல்களைப் பாடினார்கள். இளந்தமிழா கேள், இளைஞன் உள்ளம் என்னும் பொருள்கள்பற்றி அன்பழகன் அவர்களும், புலவர் மாணிக்கம் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். மாலை 3. மணிக்குதோழர் முத்துகிருட்டிணநாடார் அவர்கள் தலைமையில்மாலை நிகழ்ச்சிதுவக்கப்பட்டது. "வருங்காலம்" "நமக்கு என்ன வேண்டும்?" "நந்தமிழ்நாடு" "வாழ்க்கை" என்னும் பொருள்கள் பற்றி முறையே ச. தனபாக்கியத்தம்மையார், புருடோத்தமன்(கரந்தை), மதியழகன், சி. இலக்குவனார் பி. ஓ. எல். ஆகியோர் பேசினார்கள். கூட்டத்திற்கு வர இயலாத நடிகமணி தோழர் M. R இராதாவின் பேச்சு படிக்கப்பட்டது. பல தோழர்களிடமிருந்து வாழ்த்துச்செய்திகள் வந்து குவிந்தன.

---

## தமிழ்இசைக் கழகம்.

காஞ்சீபுறத்தில், பிரபல பாங்கரும் மிராசுதாரருமான ராவ்பகதூர் K. சாம்பசிவச் செட்டியாரவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்இசைக் கழகம் காஞ்சிபுரத்தில்சென்றகிழமை அமைக்கப்பட்டது. அண்ணமலைப்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இராமநாதன் அவர்கள்துவக்கவிழா சொற்பொழிவாற்றினார்.

---

## சேலத்தில் திராவிடர் வெற்றி.

சுமார் 50 வருடகாலமாகப் பார்ப்பனர்களே நிர்வாகஸ்தர்களாகவும் தங்களுக்கேசொந்தம்என்றும்கருதிக்கொண்டுமிருந்த சேலம் "லிட்டரரிசொசைட்டி"யின் ஜெனரல்பாடி மீட்டிங் சென்ற 27—2—44ல் தோழர் C. .G ரெட்டோ M. A; B. L; அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது நடப்பு ஆண்டிற்கு தோழர் A.இராமசாமிக் கவுண்டர் M.A; L. T; (சேலம் கல்லூரித் தலைவர்) தலைவராகவும், தோழர் T. R. வேணுகோபால் B. A; B. L; காரியதரிசியாகவும், தோழர் P. இராமலிங்கம் லைபரேரியனாகவும் மற்றும் தோழர்கள் P. இரத்தினசாமிப் பிள்ளை, ராஜா இராமலிங்கம், கணேச சங்கர், M. இராமசாமி, தேவநேசன், அத்தாவுல்லா சாயபு, R. K. பானு, பால சுப்பிரமணிய முதலியார் முதலிய 9 பேர்நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## குடந்தை மாணவர் மாநாடு.

2ம் பக்கத் தொடர்ச்சி.

மென வேண்டிக்கொள்கிறேன். நம்முடைய நன்மைக்கே நாம் இப்போரில் பிரித்தனுடன் ஒத்துழைக்க வேண்டும். திராவிட நாட்டைப்பெற்ற பின்னர், போலந்தின் தனியுரிமையை "ஹிட்லர்" மூன்று திங்களிற்பொடியாக்கி விட்டாற்போல, பிரெஞ்சுநாட்டு வீரசுதந்தரத்தை இருபத்தொன்பது நாட்களில் அந்நாகரிக மற்றவன் நசுக்கி விட்டாற்போல, பெல்ஜியத்தில் சுதந்திரத்தைப் பத்தொன்பது நாட்களில் அப்பகற்கொள்ளைக்காரன் பறித்துக்கொண்டாற்போல, டென்மார்க்கின் உரிமையை அவன் பன்னிரண்டுமணி நேரத்தில்அழித்தொழித்தாற்போல, வீரத்திராவிடர்களாகியயாம் உரிமையை இழந்து, இழந்தஉரிமையைப்பெற்று மீண்டும் பிறர்நம்மை அடக்கியாள இடந்தரலாமா? (தாரோம், தாரோம் எனும்ஒலி) இடந்தரோம். எனின் நீவிர் இன்றேபிரித்தானிய ஆட்சியின்கீழுள்ள நிலப்படை, வானவூர்திப்படை, கடற்படைமுதலிய படைகளில்சேர்ந்து பயிற்சிபெறவேண்டும். நம் மாணவர்களிற் பலர் பயிற்சிபெற்றுச் சிறந்த வீரர்களாகத் திரும்பினாற்றான் யாம்திராவிடநாட்டை ஒழுங்குபெற ஆட்சிபெற இயலும். சிறந்த போர்முறைகளை, அதிலும் இக்காலத்துப்போர்முறைகளை, அறிந்தமாணவர்களே பிற்காலத்தில் இந்நாட்டுப்படைகட்குத் தலைவராய் இலங்கப்போகின்றனர். திராவிடநாட்டைப்பிறர் படையெடுப்பினின்றும் காப்பாற்றும்பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பெறும். ஆகையால் நம்திராவிடநாட்டின் நலங்கருதியேனும் திராவிட வாலிபர்கள் பலரும் இப்போரிற்சேர்ந்து பயிற்சிபெறவேண்டுமென மிகத்தாழ்மையுடன் இம்மாநாட்டின் திறப்புரையின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழ்நாட்டிற் சென்னையிலும், சிறப்பாகத் திருச்சிராப்பள்ளியிலும் நிறுவப்பெற்றுள்ள அனைத்திந்தியவானொலி நிலையங்கள் பார்ப்பனஏகாதிபத்திய ஆட்சியில் அகப்பட்டுள்ளன. இந்நிலையங்களின் ஆட்சியுரிமைமாற்ற திராவிட மாணவர்களாகிய நீங்கள்செயல் புரிவீர்களாக.

திராவிடர்களுடைய மொழி, கலை, நாகரிகம்,சமயம்முதலியவற்றைப்போற்ற வேண்டுமென எண்ணுகின்றவர்கள் நாட்டுப் பிரிவினைக்கிளர்ச்சியை முழுமனதுடன் ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளனர். பிறநாட்டு ஆட்சியாளர் தலைமையில்தங்கள் சமய உண்மைகளின் வழியொழுகுதற்கு இயலாதென்பதனைத் திருவண்ணாமலையில் நிகழ்ந்த செயல்களான் சைவ நன்மக்கள் நன்குணர்ந்துள்ளனர். பல திருப்பதியில் நிகழ்வுறும் செயல்கள் வைணவமதத்தினரை விழிப்புறச் செய்துள்ளன. ஏனைய சமயச்சார்புடையோரும் தங்கள் குறைபாட்டினை வெளியிட்டுரைக்காமல் ஒழுகுகின்றனர். இவற்றையெல்லாம் உளத்துட்கொண்டு, யாம்எச்சமயத்தைச் சார்ந்திருப்பினும், எக்கொள்கையுடையோராயினும், திராவிடர் என்ற ஒருபெரும் பிரிவினுள் அடங்கியுள்ளோமென்பதை உணர்ந்து ஆரிய ஆதிக்கத்திற்கு இடமின்றித் திராவிட நாட்டைத் தனியே பிரித்துத் திராவிட ஆட்சிநிகழத் திராவிடமாணவர்கள் செயல்புரிதல்அவர்கட்குற்றகடமையன்றோ ? அக்கடமையையும் சட்டவரம்பிற்கு உட்பட்டுச்செய்வீர்களாக. எச்செயலையும் ஒருகுறிக்கோளுடனேயே மாணவர்களாய நீங்கள் ஆற்றவேண்டும். "தமிழ்" என்றசொல்லே "திராவிடம்" என மரிவிற்றென்றும், "திராவிடம்" என்ற சொல்லே "தமிழ்" ஆயிற்றென்றும் இருசார்பாய கொள்கைகளை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர், நமது தலைவர் பெரியார் ஈ. வெ ரா. அவர்கள் திருXஇடம் எனும்தூய தமிழ்ச்சொற்களே திராவிடம் எனமரிவிற்றென்று உரைத்துள்ளனர். இச்சொல் எவ்வாறு மரீஇ வழங்கினும் வழங்குக. யாம் இச்சொல்லையே அடிப்படையாகக் கொண்டு நம் செயல்களில் வெற்றிபெற வேண்டுமென்ற குறிக்கோளை மாணவர்களாகிய நீங்கள் உறுதிப் பாட்டுடன் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

எங்குநோக்கினும் "திராவிடநாடு திராவிடருக்கே" யென்னும் முழக்குஎழும்ப ஏற்பன செய்யவேண்டும். "தமிழ்நாடு, தமிழருக்கே" எனும்வீர உரைகளைஎழுப்பிய காலஞ்சென்ற சர். A. T. பன்னீர்ச்செல்வம் அவர்களின் பெருமிதத்தோற்றத்தை உங்கள் உளத்தேகொண்டு உங்கள் கடமையைச் செய்யுங்கள். திராவிடமாணவர்களாகிய உங்கள் கடமை மலையினும் மாணப் பெரிதாயுள்ளது. கடமையை உணருங்கள். நமக்குள்ளேயே உள்ள சமயப்பூசல், சாதிப்பூசல் முதலியவற்றை ஒதுக்கித்தள்ளுங்கள். எங்கள் முன்னோராண்ட நாட்டைமீட்டு யாங்களே ஆட்சிபுரிவோம். வெள்ளையரோ அவர் அடிவருடிகளாகிய ஆரியர்களோ இனி இந்நாட்டையாள இடந்தரோம் என முழங்குங்கள். "இயலாதென்பது என் அகராதியில் இல்லை" என்ற நெப்போலியன் மொழிகளை எண்ணுங்கள். எத்தகைய எதிர்ப்பு ஏற்படினும் அவற்றைப் பொருட்படுத்தாது திராவிடநாட்டைப் பெற்றே தீருவோமென முழங்குங்கள், "உலகம் முழுதும் கையில் வாளேந்தி உங்கட்கெதிராகக் கிளர்ச்சி புரியினும் நீங்கள் உண்மையெனப்பட்டதைச் செய்ய உறுதிகொள்வீர்களாக." என விவேகானந்த அடிகள் விளம்பிய மொழிகளை எண்ணுங்கள்; வெற்றியுறச் செயல்புரியுங்கள். "வாள்மலைந்தெழுந் தோளை மகிழ்ந்து பறைதூங்க நாடவற்கருளிய பிள்ளையாட்டு"எனத் தொல்காப்பியனார் கூறியஉரைக்கு இலக்காக மலைந்து நாட்டுரிமையைப் பெறுங்கள்.

வெற்றிவிழாவை உரிமையுடைய திராவிடநாட்டிற் கொண்டாடுதற்கு இதனினும் சிறந்த பெரும்மாநாடு கூட்டுங்கள். திராவிடநாட்டைப்பெற்ற அன்று பெருமிதத்துடன் உரிமைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டைத் திறந்துவைத்து வெற்றி முழக்கம் எண்டிசையும் இயம்ப, யாம்யாவரும்கேட்டு மகிழ்வோமாக. வாழ்க திராவிட மாணவர்கள்! வாழ்க திராவிடநாடு! எனவாழ்த்தி இம்மாநாட்டை மகிழ்ச்சியுடன் திறந்துவைக்கிறேன்.

## பச்சையப்பன் பள்ளி ஆண்டு விழா!

**சிதம்பரம்.**

ஆண்டுவிழாவுக்குத் தலைமை வகித்த கடலூர் குற்றச் சாட்டுப்பணி-திருசக்கரபாணி அய்யங்காரவர்கள் தமது சொற்பொழிவில்இத்தமிழ்நாட்டிலுதித்தவர்கள் என்னபட்டதாரியாய் இருந்தபோதிலும் பொது மேடைகளுக்கு வந்துபேசும் போது தாய்மொழியாகிய தமிழிலேயே பேசுதல் அவசியமானது, அதுவேவிரும்பத்தக்கதும் நியாயமுமாகும் என்று (ஆங்கிலத்தில்) பேசியதோடு தமிழில் பேசாதவர்களை இந்தப் பள்ளியின் தர்மகர்த்தாவான பச்சையப்ப முதலியார் இன்று காணுவாரானால் எவ்வளவு வருந்துவார் என்றும்தான் உணர்வதாகச் சொன்னார். முடிவில் சில மக்கள், ஏனோ வடமொழியை மாற்றாந்தாய் முறையில் கருதுகிறார்கள். அந்த வடமொழி நூல்களில்தான் பல அரசியல், பொருளியல் முதலான பலஅரியகருத்துகள் போதிந்து கிடக்கிறது. அறிவை விருத்திசெய்ய வேண்டிய ஒவ்வொருவரும் வடமொழி நூலையும் கற்றுத்தேர்ச்சி பெறுதலே நல்லது என்றுதான் சிபார்சு செய்வதாகவும் பேசினார். திறமைவாய்ந்தவர்களெனப் பட்ட பலமாணவர்களுக்குப் பரிசுவழங்கினார். விழாவுக்காக நடந்த மாணவர் நாடகத்தையும் கண்டு மகிழ்ச்சிபெற்றார்.

## திருமணம்.

அருப்புக்கோட்டை தோழர் மா. உ. மாயகருப்பநாடார் அவர்கள் குமாரர் செல்வன் சிவசாமிக்கும் கல்லூரணி தோழர் மயி. ச. சுப்பய்யநாடார் அவர்கள் குமாரி செல்வி, சிவகாமியம்மாளுக்கும், கல்லூரணி மணமகன் இல்லத்தில் 7—2—44 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்குத்தோழர் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியனார் அவர்கள் தலைமையில் சீர்திருத்தமுறையில் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் M. S. இராமசாமி S. S. பழனிச்சாமி; S.V. சண்முக சுந்தரனார் ஆகியோர்களால் "தற்கால முற்காலத் திருமணங்கள்"என்னும் விரிவுரையாற்றிய பின்னர் நண்பர்கள் பலர் உபசாரப்பத்திரங்களும்அன்பளிப்புகளும் வழங்கினர். திராவிடநாடு வளர்ச்சிக்காக மணமக்கள் ரூ-1, நன்கொடைதந்தனர்.

# திராவிடமாணவர் மாவட்ட மாநாட்டின் தீர்மானங்கள்.

★

1. உலக அமைதிகெடும் வண்ணம் பல்வேறு நாடுகளின் உரிமையையழித்துவரும் வன்கண்ணரொடு தொடுக்கப்பட்டிருக்கும் உலகப்பெரும்போரில் நேசநாடுகள் வெற்றியடைவதாக என்று இம்மாநாடு முழுமனதுடன் கூறவிரும்புகின்றது.

2. திராவிடநாட்டின் முன்னேற்றத்தின் அறிகுறியாகக் கைத்தொழில் கல்வி வளர்ச்சிக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ. 5 இலக்ஷமும், சென்னை பல்கலைக்கழகத்திற்கு ரூ. 3 இலக்ஷமும், கொடுத்துதவிய டாக்டர் R. M. அழகப்ப செட்டியார் அவர்களையும், தொழிலாளர்களுக்காகவும் ஏழைமாணவர்களுக்காகவும், பெரும் பொருட்குவியலை அளித்துதவிய உயர்திரு. G. D. நாயுடு அவர்களையும் இம்மாநாடு பெரிதும் பாராட்டுகிறது. (இரண்டு தீர்மானங்களும் தலைவரால் படித்து நிறைவேற்றப்பட்டன)

3. தமிழ் இசை இயக்கத்தைத்துவக்கி தமிழ் இசைவளர்ச்சிக்கானவற்றைச் செய்துவரும் வள்ளல் சர். அண்ணாமலை செட்டியார்அவர்கள் முயற்சியை பாராட்டுவதுடன் தமிழிசை இயக்கம் நூற்றுக்குத் தொண்ணூறுபாடல்கள் தமிழில் இருக்கட்டும்என்றுகெஞ்சிக்கேட்டுக் கொள்வதைவிடுத்து நூற்றுக்குப் பத்து பாடல்கள் வேண்டுமானால் பிறமொழிப் பாடல்களாக இருக்கட்டும் என்று கூறும் முறையில் வளர்ந்துவர வேண்டுமென்று இம்மகாநாடு விரும்புகிறது.

முன்மொழிந்தவர்,
M. இராமநாதன், குடந்தைக் கல்லூரி.

வழிமொழிந்தவர்,
M. அமீர்சுல்தான், குடந்தை உயர்நிலைப்பள்ளி.

4. முத்தமிழ்க் கலைகளாகிய இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை ஆகிய கலைத்துறைகள் திராவிட இனஇழிவிற்கும் திராவிட நாட்டின்பிற்போக்கிற்கும் காரணமாக இல்லாமல் இனஉயர்விற்கும் நாட்டின் முற்போக்கிற்கும், அறிவின் வளர்ச்சிக்கும் ஏதுவாகஇருக்கும் தன்மையில் அவ்வக்கலைக்குறிய அறிஞர்கள் பாடுபடவேண்டுமென்று அவர்களை இம்மாநாடுகேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்,
நெடுஞ்செழியன்.

வழிமொழிந்தவர்,
காந்தைப்புலவர் அரங்கசாமி.

5. தமிழ் நாட்டில்உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழை விருப்பப்பாடமாக இருக்கும்நிலையை மாற்றி கட்டாயபாடமாக்கவேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்,
தண்டபாணி, அண்ணாமலைநகர்,

வழிமொழிந்தவர்,
கோவை. மெய்கண்டசிவன்,
திருவையாறு அரசர்கல்லூரி.

6. கல்விமுறை அமைப்பிலே பாடத்திட்டங்கள் வேற்றுமையுணர்ச்சியை வளர்த்து பூசல்களைவிளைவிக்கும் குறிப்பிட்ட சமயக்கொள்கைகளை தனித்தனி வற்புறுத்தாமல் அறிவுவளர்ச்சியடைந்த பிறகு அவைகளைக்காணக்கூடிய உலகியல் பொதுஅறிவைப் புகட்டுகின்றமுறையில் அமைக்கப்படவேண்டுமென்று கல்வித்துறை ஆணையாளருக்கு இம்மாநாடு கூறவிழைகின்றது.

முன்மொழிந்தவர்,
A. P. ஜனார்த்தனம், B. A;
சென்னை.

வழிமொழிந்தவர்,
சிவ. வேலாயுதம், காந்தை.

7. அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலும் சென்னைப்பல்கலைக் கழகத்திலும் வழங்கிவரும் "வித்வான்" எனும் பட்டத்தை இனி "புலவர்" என்று வழங்கக் கேட்டுக்கொள்வதுடன் அரசினரை "ஸ்ரீ" என்று உபயோகிப்பதை நீக்கி "திரு" என்று உபயோகிக்கக்கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்,
காந்தைப்புலவர் பெரியசாமி.

வழிமொழிந்தவர்,
குழந்தையா, திருவையாறு.

8. பார்ப்பனரல்லாத மாணவர்களின் உண்டி, உரையுடன், உதவிச்சம்பளம் ஆகியவற்றிற்கென்று கும்பகோணம் அரசினர்கல்லூரிக் குத்திருப்பனந்தாள் மடத்தலைவர் பெரும்பொருள் வழங்கிய பெருந்தன்மையை இம்மாநாடு போற்றுவதோடு, மற்றமடங்களின் தலைவர்களும் இவ்வழியைப் பின்பற்றி வாடியநம்மக்களை வாழும்படிச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்,
R. S. ஜெகநாதன், குடந்தைக் கல்லூரி. S. முத்துக்கிருஷ்ணன்

9. கல்லூரிகளில் திராவிட (பார்ப்பன ரல்லாத) மாணவர்களுக்கு தேர்தல் உயர்ந்த எண்களைகண்டு தேர்ந்தெடு காது மக்கட்தொகுதிக்கேற்ப உணர்வு கலை (Arts) அறிவுக்கலை (Science) ஆகிய பிரிவுகளில் பெரும்பாலான இடங் களைக்கொடுக்கும்படிசெய்ய வேண்டு மென்று அரசியலாரைக்கேட்டுக்கொள் கிறது.

முன்மொழிந்தவர்,
C. கிருஷ்ணமூர்த்தி, குடந்தை உயர்நிலைப்பள்ளி

வழிமொழிந்தவர்,
A. துரைராஜன்.

10. திராவிடநாட்டில்வதியும் பழங்குடி மக்களாகிய அனைவரும் பாடசாலைகள் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்கள் ஜனனமரண ஆபீஸ்கள் கோர்ட்டுகள்முதலிய எல்லா ஆபீஸ்களிலும் இனம், மதம், சாதிஆகிய எல்லாவற்றிற்கும் திராவிடர் என்றே பதிவுசெய்யவேண்டுமாய் அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. (இது திருவாரூர் மாநாட்டுத்தீர்மானமே.)

முன்மொழிந்தவர்,
காந்தை, சம்பந்தசாமி.

வழிமொழிந்தவர்,
பழனி, காந்தைப்புலவர்.

11. இவ்விடமுள்ள அரசினர்கல்லூரி யின்தமிழ்ப்பேரவைஇதர பொதுப் பேரவை ஒன்றிற்கு கீழ்ப்பட்டுள்ளதை பற்றிவருந்தி அதுதனிப்பேரவையாக ஆக்கப்படவேண்டுமெனக்கேட்டுக்கொள் கிறது.

முன்மொழிந்தவர்,
G. திருஞானம் குடந்தைக்கல்லூரி

வழிமொழிந்தவர்,
S. கருணானந்தம் ,,

12. போர்முடியும் அமைதிநிலையில் தனிஇனம், பண்பு, பழக்கவழக்கம், நாகரிகம், ஆகியவற்றைக்கொண்ட நாடு களுக்கு உரிமை அளிக்கும்போது திராவிடநாடும் தன்னுரிமை அடையவேண்டுமென்று இம்மாநாடு விரும்புகிறது.

முன்மொழிந்தவர்,
அன்பழகன், அண்ணாமலைநகர்.

வழிமொழிந்தவர்,
நன்னன் ,,

13. இவ்வூர் அரசினர்கல்லூரி மாண வர்களின் உணவுவிடுதியில் துணைப்பாது காப்பாளர் பார்ப்பனராகத்தான் இருக்க வேண்டுமென்பதை மாற்றவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மேற்படி தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.